# விழுப்புரம் நகராட்சி

2019–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற “சாதாரண கூட்ட” நடவடிக்கைகள்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
விழுப்புரம் நகராட்சி.

## மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சிப் பகுதியில் இயற்கை பேரிடர் வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் பாதிப்பு முன்னேற்பாடு பணிக்காக மணல் மூட்டைகள், சவுக்கு கம்புகள் மற்றும் பழுதாகும் சாலைகளை தற்காலிகமாக செப்பனிட கிராவல் கலவை (Wed Mix) ஆகியவற்றை தயார் நிலையில் சேமித்து வைக்கவும், அதற்கான செலவினம் ரூ.92301/–ஐ சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(9765/2018/இ1)

**2.** இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–19–ன் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 சிப்பங்கள் சாலைப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 28.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்பணியின் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் 3 பிரிவு 4.1(A) 4–ல் நிபந்தனையை தளர்வு செய்ய தெரிவித்து திருமதி.A.நஸீம் க/பெ அகமது ஒப்பந்ததாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சிக்கு எதிராக WP.No.341/2019–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன் அரசு வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்து வழக்கினை நடத்த கோரவும் வழக்கு செலவினம் ரூ.15,000/–ஐ வழங்க அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் வழக்கு 07.01.2019 அன்று பட்டியலில் உள்ளதால் வக்காலத்து அறிக்கையுடன் ஆஜராக வழக்கறிஞர் தெரிவித்துள்ளதால் வழக்கின் அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(80/2019/இ1)

# <u>விழுப்புரம் நகராட்சி</u>

2019–ம் ஆண்டு **ஜனவரி மாதம் 31–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற "**சாதாரண கூட்ட**" நடவடிக்கைகள்.

<u>முன்னிலை :–</u> **சா.லட்சுமி, எம்.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## <u>மன்றப்பொருள்</u>

**1.** இந்நகராட்சிப் பகுதியில் இயற்கை பேரிடர் வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் பாதிப்பு முன்னேற்பாடு பணிக்காக மணல் மூட்டைகள், சவுக்கு கம்புகள் மற்றும் பழுதாகும் சாலைகளை தற்காலிகமாக செப்பனிட கிராவல் கலவை (Wed Mix) ஆகியவற்றை தயார் நிலையில் சேமித்து வைக்கவும், அதற்கான செலவினம் ரூ.92301/–ஐ சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(9765/2018/இ1)

**2.** இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–19–ன் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 சிப்பங்கள் சாலைப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 28.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்பணியின் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் 3 பிரிவு 4.1(A) 4–ல் நிபந்தனையை தளர்வு செய்ய தெரிவித்து திருமதி.A.நஸீம் க/பெ அகமது ஒப்பந்ததாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சிக்கு எதிராக WP.No.341/2019–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன் அரசு வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்து வழக்கினை நடத்த கோரவும் வழக்கு செலவினம் ரூ.15,000/–ஐ வழங்க அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் வழக்கு 07.01.2019 அன்று பட்டியலில் உள்ளதால் வக்காலத்து அறிக்கையுடன் ஆஜராக வழக்கறிஞர் தெரிவித்துள்ளதால் வழக்கின் அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(80/2019/இ1)

**3.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.08, திடீர்குப்பம் பகுதியில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.1,54,810/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து எந்நூற்று பத்து மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **16.10.2018** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

( /2018/இ2)

**4.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காட்பாடி இரயில்வே கேட் (வடக்கு தெரு, கைவல்லியர் தெரு, கமலா நகர், தக்கா தெரு, ரஹிம் லே அவுட், செல்லியம்மன் கோவில் தெரு) பகுதிகளில் தனியார் வாகனம் மூலம் (01.07.2018 முதல் 31.07.2018 வரையிலான காலத்திற்கு) குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.1,95,804/– (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எந்நூற்று நான்கு மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **19.06.2018** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(4440/2018/இ2)

**5.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.14,1,2,24&27 ஆகிய பகுதிகளில் தனியார் வாகனம் மூலம் (01.06.2018 முதல் 30.06.2018 வரையிலான காலத்திற்கு) குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.1,95,804/– (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எந்நூற்று நான்கு மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **23.05.2018** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

( 4440/2018/இ2)

**6.** விழுப்புரம் நகராட்சியில் உள்ள நீர்த்தேக்க தொட்டிகளுக்கு (59 Nos) திரவ குளோரின் (Sodium Hypo chlorite Solution) சப்ளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (93/2019/இ2)

**7.** நகராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் தூர்வாரி மழைநீர் தேங்காமல் பராமரிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். தற்போது நகராட்சி பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்ய போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, சுய உதவிக்குழு மூலம் 30 நபர்களை பணியமர்த்தி, வடிகால் தூர்வாரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை, வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**8.** விழுப்புரம் நகராட்சியில் எதிர்வரும் **2019** ஜனவரி திங்கள் **26–**ம் நாள் குடியரசு தின விழாவை முன்னிட்டு இணைச்செயலர் (அரசு), சென்னை அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் வாயிலாக மின்னணு கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து, அலுவலக தேசியக் கொடிகம்பம், நகராட்சி பூங்கா, PJN ரோடு காந்திசிலை பேருந்து நிலையம் ஆகியவற்றிற்கு வண்ண விளக்குகள், அலங்காரத் தோரணம், ஒலி ஒளி அமைப்பு, விழா பந்தல் மற்றும் பூ மாலைகள் போன்றவற்றை அமைத்து தரும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**31,000/–**த்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களது முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(10275/2018/இ2)

**9.** அரசு பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு **2017–2018–**ம் ஆண்டிற்கான (பொங்கல் போனஸ்) மிகை ஊதியம் (ம) சிறப்பு மிகை ஊதியம் பெற்றுக்கொள்ள அனுமதித்து தமிழக அரசால் வெளியிடப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.**5**, நிதி (படிகள்)த் துறை, நாள்.**08–01–2019–**ம் தேதிய அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(276/2019/சி1)

**10.** விழுப்புரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் **2018–2019–**ன் கீழ் சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ.**500.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.18.09.2018 தேதிய செயல்முறை உத்தரவில் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரது செயல்முறை கடிதம் எண்.20308/2018/DO1, நாள்.02.11.2018–ல் தொழில்நுட்ப அனுமதியும், மூன்று சிப்பங்களுக்கு பெறப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கீழ்க்காணும் சாலைகள் அமைக்கும் பணிக்கு (சிப்பம்–1) 28.12.18–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் |
|---|---|---|
| 1 | <u>சிப்பம்:1</u><br>வார்டு எண்கள்.01,02,03,04 மற்றும் 25–ல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம், ரங்கநாதன் ரோடு, ராஜாமணி நகர், சிவகடாக்ஷம் தெரு, நடராஜன் மனைப்பிரிவு, பாலசுப்ரமணியன் நகர், ஜனகராஜ் கார்டன் மற்றும் அக்ரகாரம் தெருவிற்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 1). திருமதி. R. சிவகாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெ.11, வி.மருதுார்மேடு,<br>விழுப்புரம். |
| | | 2). KSR & Co.,<br>ஒப்பந்ததாரர்,<br>தென்கோடிபாக்கம்,<br>வானுார் வட்டம். |
| | | 3). திருமதி. A. நஸீம்,<br>ஒப்பந்ததாரர்,<br>நெ.33, முகம்மதியர் தெரு,<br>விழுப்புரம். |

மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப விவரங்கள் (Technical Bids) அடங்கிய உறைகள் **28.12.2018** அன்று பரிசீலனை குழுவால், ஆய்வு செய்யப்பட்டதில் திருமதி. ஆர். சிவகாமி மற்றும் KSR & Co., ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி (Technical Bids) பெற்றுள்ளார்கள்.

மேற்கண்ட தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரருக்கு உரிய அறிவிப்புகள் அனுப்பப்பட்டு 07.01.2019 அன்று விலை விவர உறை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்த தொகை (ரூ.) | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்:1</u><br>வார்டு எண்கள்.01,02,03,04 மற்றும் 25–ல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம், ரங்கநாதன் ரோடு, ராஜாமணி நகர், சிவகடாக்ஷம் தெரு, நடராஜன் மனைப்பிரிவு, பாலசுப்ரமணியன் நகர், ஜனகராஜ் கார்டன் மற்றும் அக்ரகாரம் தெருவிற்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | **1,81,00,000** | திருமதி.R. சிவகாமி | **16218444.40** | 4.53% அதிகம் |
| | | | KSR & Co., | **16736412.20** | 7.87% அதிகம் |

மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ("Price Bid") ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.R.சிவகாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக இருந்ததால் ஒப்பந்ததாரர் திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு செய்துதர (Negotiation) இவ்வலுவலக கடிதம் எண்.**4234/2018/இ1**, நாள்.**08.01.2019** மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரர், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி ("Price Bid") ரூ.**16218444.40/–**ஐ விட விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.**16197557.80/–**க்கு குறைத்து தர கடிதம் வழங்கியுள்ளார். இது மதிப்பீட்டை விட **4.40%** அதிகம் ஆகும். எனவே, மேற்காணும் திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டினை விட அதிக விலைவிகிதம் குறிப்பிடப்பட்டு அளித்து பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரருக்கு விலை குறைப்பு செய்து தரக்கோரியதை தொடர்ந்து ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.**16197557.80**/— (**4.40**%)—க்கு விலை குறைப்பு சம்மதம் தெரிவித்து அளித்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. மேற்படி பணியானது திட்டப்பணியாதலாலும் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு விரைந்து பணியினை முடிக்க வேண்டியதன் அவசியத்தினை கருதி திருமதி.R.சிவகாமி என்பவரது விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. திட்ட மான்யத்திற்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4234—1/2018/இ1)**

**11.** விழுப்புரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் **2018—2019**—ன் கீழ் சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ.**500.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.18.09.2018 தேதிய செயல்முறை உத்தரவில் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரது செயல்முறை கடிதம் எண்.20308/2018/DO1, நாள்.02.11.2018—ல் தொழில்நுட்ப அனுமதியும், மூன்று சிப்பங்களுக்கு பெறப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கீழ்க்காணும் சாலைகள் அமைக்கும் பணிக்கு (சிப்பம்—2) 28.12.18—ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் |
|---|---|---|
| 1 | <u>சிப்பம்:2</u><br><br>வார்டு எண்கள்.**25,26,27** மற்றும் **28**—ல் ராஜீவ் காந்தி நகர், சுதாகர் நகர், ஸ்ரீதரன் நகர், அப்துல்கலாம் தெரு, அன்னை இந்திராகாந்தி நகர், அன்னை தெரசா நகர், அன்னை தெரசா நகர் விரிவாக்கம், இந்திரா பிரியதர்ஷினி நகர் மற்றும் சிங்கப்பூர் நகருக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | **1**). திருமதி. R. சிவகாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெ.**11**, வி.மருதூர்மேடு,<br>விழுப்புரம்.<br><br>**2**). KSR & Co.,<br>ஒப்பந்ததாரர்,<br>தென்கோடிபாக்கம்,<br>வானூர் வட்டம்.<br><br>**3**). திருமதி. A. நஸீம்,<br>ஒப்பந்ததாரர்,<br>நெ.**33**, முகம்மதியர் தெரு,<br>விழுப்புரம். |

மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப விவரங்கள் (Technical Bids) அடங்கிய உறைகள் **28.12.2018** அன்று பரிசீலனை குழுவால், ஆய்வு செய்யப்பட்டதில் KSR &

Co., மற்றும் திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி (Technical Bids) பெற்றுள்ளார்கள்.

மேற்கண்ட தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரருக்கு உரிய அறிவிப்புகள் அனுப்பப்பட்டு 07.01.2019 அன்று விலை விவர உறை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்த தொகை (ரூ.) | ஒப்பந்த சதவீதம் மதிப் பீட்டைவிட |
|---|---|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்:2</u> வார்டு எண்கள்.25,26,27 மற்றும் 28–ல் ராஜீவ் காந்தி நகர், சுதாகர் நகர், ஸ்ரீதரன் நகர், அப்துல்கலாம் தெரு, அன்னை இந்திராகாந்தி நகர், அன்னை தெரசா நகர், அன்னை தெரசா நகர் விரிவாக்கம், இந்திரா பிரியதர்ஷினி நகர் மற்றும் சிங்கப்பூர் நகருக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 1,69,00,000 | KSR & Co., | 15518134.80 | 4.45% அதிகம் |
| | | | திருமதி.R. சிவகாமி | 15925786.16 | 7.19% அதிகம் |

மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த (“Price Bid”) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள KSR & Co., அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக இருந்ததால் ஒப்பந்ததாரர் KSR & Co., ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு செய்துதர (Negotiation) இவ்வலுவலக கடிதம் எண்.4234/2018/இ1, நாள்.08.01.2019 மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி KSR & Co., ஒப்பந்ததாரர், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி (“Price Bid”) ரூ.15518134.80/–ஐ விட விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.15493638.60/–க்கு குறைத்து தர கடிதம் வழங்கியுள்ளார். இது மதிப்பீட்டை விட 4.28% அதிகம் ஆகும். எனவே, மேற்காணும் KSR & Co., ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டினை விட அதிக விலைவிகிதம் குறிப்பிடப்பட்டு அளித்து பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள KSR & Co., ஒப்பந்ததாரருக்கு விலை குறைப்பு செய்து தரக்கோரியதை தொடர்ந்து ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.15493638.60/– (4.28%)–க்கு விலை குறைப்பு சம்மதம் தெரிவித்து அளித்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. மேற்படி பணியானது திட்டப்பணியாதலாலும் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு விரைந்து பணியினை முடிக்க வேண்டியதன் அவசியத்தினை கருதி KSR & Co., என்பவரது விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. திட்ட மான்யத்திற்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4234–2/2018/இ1)**

**12.** விழுப்புரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் **2018–2019–ன்** கீழ் சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ.**500.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12981/2018/இ3, நாள்.18.09.2018 தேதிய செயல்முறை உத்தரவில் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரது செயல்முறை கடிதம் எண்.20308/2018/DO1, நாள்.02.11.2018–ல் தொழில்நுட்ப அனுமதியும், மூன்று சிப்பங்களுக்கு பெறப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கீழ்க்காணும் சாலைகள் அமைக்கும் பணிக்கு (சிப்பம்–3) 28.12.18–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் |
|---|---|---|
| 1 | <u>சிப்பம்:3</u><br>வார்டு எண்கள்.**29,30,37,38,39,40** மற்றும் **42–ல்** கே.கே நகர் மெயின் ரோடு, பரசுராமன் கார்டன், சண்முகபெருமாள் மெயின் தெருவில் பிள்ளையார் கோவில் முதல் திரௌபதியம்மன் கோவில் வரை, ஜீவா நகர், குச்சிப்பாளையம் முதல் கிழக்கு பாண்டி ரோடு வரை, பெருமாள் நகர், மகாராஜபுரம் வீட்டு வசதி வாரியம், பாலாஜி நகர் மற்றும் கணபதி நகருக்கு தார்சாலை அமைக்கும் பணி. | **1).** திருமதி. R. சிவகாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெ.**11**, வி.மருதுார்மேடு,<br>விழுப்புரம். |
| | | **2).** KSR & Co.,<br>ஒப்பந்ததாரர்,<br>தென்கோடிபாக்கம்,<br>வானுார் வட்டம். |

மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப விவரங்கள் (Technical Bids) அடங்கிய உறைகள் **28.12.2018** அன்று பரிசீலனை குழுவால், ஆய்வு செய்யப்பட்டதில் திருமதி.R.சிவகாமி மற்றும் KSR & Co., ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி (Technical Bids) பெற்றுள்ளார்கள்.

மேற்கண்ட தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரருக்கு உரிய அறிவிப்புகள் அனுப்பப்பட்டு 07.01.2019 அன்று விலை விவர உறை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்த தொகை (ரூ.) | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்:3</u><br>வார்டு எண்கள்.**29,30,37,38,39,40** மற்றும் **42–ல்** கே.கே நகர் மெயின் ரோடு, பரசுராமன் கார்டன், சண்முகபெருமாள் மெயின் தெருவில் பிள்ளையார் கோவில் முதல் திரௌபதியம்மன் கோவில் வரை, ஜீவா நகர், குச்சிப்பாளையம் முதல் கிழக்கு பாண்டி ரோடு வரை, பெருமாள் நகர், மகாராஜபுரம் வீட்டு வசதி வாரியம், பாலாஜி நகர் மற்றும் கணபதி நகருக்கு தார்சாலை அமைக்கும் பணி. | **1,50,00,000** | திருமதி. R. சிவகாமி | **13773687.50** | 4.49% அதிகம் |
| | | | KSR & Co., | **14214862.25** | 7.84% அதிகம் |

மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ("Price Bid") ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.R.சிவகாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக இருந்ததால் ஒப்பந்ததாரர் திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு செய்துதர (Negotiation) இவ்வலுவலக கடிதம் எண்.**4234/2018/இ1**, நாள்.**08.01.2019** மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரர், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி ("Price Bid") ரூ.**13773687.50/–**ஐ விட விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.**13752925.25/–**க்கு குறைத்து தர கடிதம் வழங்கியுள்ளார். இது மதிப்பீட்டை விட **4.33%** அதிகம் ஆகும். எனவே, மேற்காணும் திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டினை விட அதிக விலைவிகிதம் குறிப்பிடப்பட்டு அளித்து பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரருக்கு விலை குறைப்பு செய்து தரக்கோரியதை தொடர்ந்து ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரூ.**13752925.25/– (4.33%)–**க்கு விலை குறைப்பு சம்மதம் தெரிவித்து அளித்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. மேற்படி பணியானது திட்டப்பணியாதலாலும் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு விரைந்து பணியினை முடிக்க வேண்டியதன் அவசியத்தினை கருதி திருமதி.R.சிவகாமி என்பவரது விலைக்குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. திட்ட மான்யத்திற்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4234–3/2018/இ1)**

**13.** இந்நகராட்சிக்குட்பட்ட 42 வார்களில் உள்ள பள்ளிகள், குடியிருப்பு பகுதிகள், மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் டெங்கு, பன்றி காய்ச்சல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்த வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | கலைக்குழு பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | சிவசக்தி கிராமிய கலைகுழு வாழப்பாடி | விஜி கலைகுழு வாழப்பாடி | ஜெயம் கலைகுழு வாழப்பாடி |
| | | Rs. | Rs | Rs. |
| 1. | நிகழ்ச்சி நாள் ஒன்றிற்கு (வாகனம் மற்றும் மைக்செட் உடன்) | 8000 | 8250 | 8300 |

அலுவலக குறிப்பு –

1. மேற்கண்ட விவரப்படி குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள சிவசக்தி கிராமிய கலைகுழு வாழப்பாடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.1.30 லட்சம் மன்றம் அனுமதிக்கலாம்.

14. இந்நகராட்சியின் செயல்பாட்டில் உள்ள அம்மா உணவகம் மையத்தில் Steemer Stove மற்றும் இரும்பு குழாய்கள், மாவு அறைக்கும் இயந்திரம் (Grinder) முற்றிலும் பழுதாகி இயங்காத நிலையால், புதியதாக மாற்றி அமைக்கவும் கிரைண்டர் புதியதாக வாங்கி பொருத்தவும் அவசியமாகிற படியால், அம்மா உணவக தினசரி செயல்பாட்டை தடையின்றி நடைபெற அவசர அவசியம் கருதி சட்ட விதி எண்.15–ன் கீழ் பணி செய்து செலவினம் ரூ.1,42,416/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(10076/2018/இ1)

15. இந்நகராட்சிக்கு சொந்தமான 7 பூங்காக்களில் இரும்பு கம்பியாலான முள்வேலி அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.14.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து தனிஅலுவலரின் முன் அனுமதி 07.11.2018–ல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 11.12.2018 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற 5 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|
| 1 | திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரர். | ரூ.1293492/– | 2.04% அதிகம் |
| 2 | M/s.அண்ணாமலையார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | ரூ.1030690/– | 18.69% குறைவு |
| 3 | M/s. S.S.V. டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.1142928/– | 9.84% குறைவு |
| 4 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.1096570/– | 13.49% குறைவு |
| 5 | திருமதி.A.நஸீம், ஒப்பந்ததாரர். | ரூ.1176574/– | 7.18% குறைவு |

அலுவலக குறிப்பு:–

1. வரப்பெற்ற 5 ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.அண்ணாமலையார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 18.69% குறைவாக கொடுத்துள்ளார்.
2. மதிப்பீட்டைவிட அதிக அளவாக 18.69% குறைவாக விலைப்பட்டியல் கொடுத்துள்ளதால் நகராட்சி பொறியாளர் கையேடு விதி VI வ.எண்.38–ன்படி கூடுதல் காப்புத் தொகை 10% செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கி ஒப்பந்ததாரர் 10% தொகை ரூ.1,45,000/–த்தை நகராட்சி கருவூலத்தில் செலான் எண்.18706, நாள்.30.01.2019–ல் செலுத்தியுள்ளதால் M/s.அண்ணாமலையார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

( 8980/2018/இ1)

16. விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளுக்கு சோடியம், மெர்குரி விளக்குகள் மற்றும் அதற்கு தேவையான உதிரி பாகங்களை சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட பணிக்கு 11.01.2019–ந் தேதியில் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விபரம் | தொகை | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்த சதவீத மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளுக்கு சோடியம், மெர்குரி விளக்குகள் மற்றும் அதற்கு தேவையான உதிரி பாகங்களை சப்ளை செய்யும் பணி. | 4,75,000 | A to Z Traders | 418380.00 | -0.16% குறைவு |
| | | | Saran Construction | 424810.00 | 1.37% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட -0.16% குறைவு) A to Z Traders அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(128/2019/இ2)

**17.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.42 குச்சிப்பாளையம் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியானது மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதாக இம்மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இயக்குபவர் கடிதத்தின் வாயிலாகவும், அப்பகுதி பொதுமக்கள் அலுவலகத்தில் புகார் அளித்ததை தொடர்ந்து நேராய்வு செய்யப்பட்டது. எனவே, அப்பகுதியில் ஏற்கனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக 30,000 கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(92/2019/இ2)

**18.** விழுப்புரம் நகராட்சியில் காட்பாடி இரயில்வே கேட் மற்றும் வடக்கு தெரு சந்திக்கும் பகுதியில் புதிதாக பாதாள சாக்கடை UGD Manhole மற்றும் பைப்லைன் பதிக்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.5,26,310/— (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தாராயிரத்து முந்நூற்று பத்து மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

மேற்கண்ட பணிக்கு **01.06.2018** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(4524/2018/இ3)

9. விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.25 ராமமூர்த்தி லே அவுட் பகுதியில் பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் ஆள்நுழைவு தொட்டி அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட பணிக்கு 09.01.2019ந் தேதியில் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விபரம் | தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்த சதவீத மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.25 ராமமூர்த்தி லே அவுட் பகுதியில் பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் ஆள்நுழைவு தொட்டி அமைக்கும் பணி. | 1,80,000 | P. கணேசன் | 167556.31 | 0.08% குறைவு |
| | | | T. இராஜேஸ்வரி | 170396.38 | 1.62% அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட 0.08% குறைவு) திரு.P.கணேசன் அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(9546/2018/**இ3**)

20. இந்நகராட்சி அலுவலகம், அம்மா உணவகம், புதிய பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள குடிநீர் சுத்திகரிக்கும் சாதனம் (Ro Plant) ஆண்டு பராமரிப்பு பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.45 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( /2019/இ2)

21. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் இயக்கும் TN32 D2651 JCB வாகனத்திற்கு இவ்வாகனத்தின் அங்கிகரிக்கப்பட்ட JCB நிறுவனமான Dyinatech என்ற நிறுவனத்திடமிருந்த கீழ்கண்ட பணிக்காக வரபெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ரூ |
|---|---|---|
| 1 | பின்பக்க டயர் 2 எண்ணிக்கை | 56770 |
| 2 | பேட்டரி 1 எண்ணிக்கை | 10412 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம். பொது சுகாதார நலன் கருதி மேற்படி பணியினை செய்யவும் மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

22. இந்நகராட்சிக்கு சொந்தமான 10 பூங்காக்களில் இரும்பு கம்பியாலான முள்வேலி அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.23.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து தனிஅலுவலரின் முன் அனுமதி 07.11.2018–ல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 11.12.2018 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற 5 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|
| 1 | திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரர். | ரூ.16,61,601/– | 18.56% குறைவு |
| 2 | திருமதி.R.பிரமிளா, ஒப்பந்ததாரர். | ரூ.20,42,894/– | 0.13% அதிகம் |
| 3 | M/s. S.S.V. டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.16,64,133.10/– | 18.44% குறைவு |
| 4 | திரு.P.பாலகுரு, ஒப்பந்ததாரர். | ரூ.17,62,360/– | 13.62% குறைவு |
| 5 | திருமதி.A.நஸீம், ஒப்பந்ததாரர். | ரூ.17,67,971/– | 13.35% குறைவு |

அலுவலக குறிப்பு:–

1. வரப்பெற்ற 5 ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 18.56% குறைவாக கொடுத்துள்ளார்.
2. மதிப்பீட்டைவிட அதிக அளவாக 18.56% குறைவாக விலைபட்டியல் கொடுத்துள்ளதால் நகராட்சி பொறியாளர் கையேடு விதி VI வ.எண்.38–ன்படி கூடுதல் காப்புத் தொகை 10% செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கி ஒப்பந்ததாரர் 11.01.2019–ல் 10% தொகை ரூ.2,32,000/– காசோலையாக செலுத்தியுள்ளதால் திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க மன்ற அனுமதிக்கலாம். (8980/2018/இ1)

23. விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.01, V.பாளையம் PKS நகர் ஊர் மத்தியில் நிலத்தடி நீர்மட்ட ஆராய்ச்சி நிறுவனம் மூலமாக ஏற்கனவே அமைக்கப்பட்ட 900 அடி ஆழ்துளை கிணற்றில் 20HP திறன்கொண்ட ஆழ்துளை மோட்டார் மற்றும் அதற்கு தேவையான குழாய்கள் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(678/2019/இ2)

24. இந்நகராட்சிக்கு சொந்தமான நகர்நல அலுவலர் அவர்களின் அலுவலகப் பயன்பாட்டில் உள்ள பொலிரோ வண்டி TN32 D 3817–க்கு பழைய பேட்டரி செயலிழந்து விட்டதால் புதிய பேட்டரி 1 வாங்கி பொருத்தவும், தினசரி அலுவலக பணியின் அவசிய அவசரம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பேட்டரி பொருத்தியமைக்கும் செலவினம் ரூ.7450/–ஐ சட்ட விதி 15–ன் கீழ் வழங்கியமைக்கும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(425/2019/இ1)

25. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, ஜெ.ஜெ.நகரில் சாலை வசதி போதுமானதாக இல்லாத நிலையில் அன்றாட போக்குவரத்துக்கும், மழைகாலங்களில் சாலையில் தண்ணீர் தேங்கி சேறும் சகதியுமாகிவிடுவதால் இச்சாலையினை GSB மற்றும் கிராவல் கொண்டு சாலையினை பராமரிப்பு செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.75 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(828/2019/இ1)**

26. இந்நகராட்சிக்குட்பட்ட காகுப்பம் கழிவுநீர் உந்து நிலையத்தில் (Lifting Sations) கழிவுநீர் வெளியேறும் பைப், வால்வு, கைபம்ப், பெட்கான்கிரிட் மற்றும் ஆட்டோமேட்டிக் கப்ளர் ஆகியவற்றை பொருத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.20 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(825/2019/இ1)**

27. இந்நகராட்சிக்குட்பட்ட திருச்சி பிரதான சாலையிலிருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள அரசின் சட்டக் கல்லூரிக்கு செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்து சட்டக்கல்லூரி மாணவ, மாணவியர்களின் போக்குவரத்துக்கு சிரமமாக உள்ளதால் புதியதாக தார்சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.20 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கல்லூரி மாணவ மாணவிகளின் போக்குவரத்தின் நலனை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(827/2019/இ1)**

